கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
திட்டக்குடி.

**OS.4/2024** **PW: 1** **25.06.2026**

2026 ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 25 நாள் வாதி தரப்பு சாட்சியாகிய பாத்திமா பீ என்பவரின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டின் 10−வது விதியின் ஏற்பாட்டின்படி செல்வி.N.ஷாலினி,B.Com.L.L.B.(Hons.) ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாத்திமா பீ | வயது | 66 |
| த/க. பெயர் | ரகுநாதன் | தொழில் | |
| வட்டம் | திட்டக்குடி | கிராமம் | மாளிகை கோட்டம் |
| மாவட்டம் | கடலூர் | | |

**குறுக்கு விசாரணை :**

ஆதியில் என்னுடைய பெயர் அஞ்சலம், நாங்கள் மதம் மாறிவிட்டோம். எந்த தேதியில் நான் மதம் மாறினேன் என்றால் எனக்கு தெரியாது, வருடமும் தெரியாது. எனது வீட்டுகாரருடைய பழைய பெயர் ரகுநாதன். மதம் மாறிய பிறகு அவரின் பெயர் அப்துல் பாஷா. அவர் எந்த தேதியில் மதம் மாறினார் என்றால் எனக்கு தெரியாது, வருடமும் தெரியாது. எனது மகனின் பழைய பெயர் ராஜேந்திரன். மதம் மாறிய பிறகு அவரின் பெயர் முகமது. அவர் எந்த தேதியில் மதம் மாறினார் என்றால் எனக்கு தெரியாது, வருடமும் தெரியாது. இந்த விவரங்கள் எல்லாம் எனது மகனுக்கு தான் தெரியும் என்றால் சரிதான். மதம் மாறியதற்கான ஆதரங்கள் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது மகன் தற்போது வெளிநாட்டில் உள்ளார். இந்த வழக்கை நடத்துவதற்கு எனது மகன் எனக்கு பொது அதிகாரம் கொடுத்த பத்திரத்தில் முகமது என்று குறிப்பிட்டுள்ளாரா அல்லது ராஜேந்திரன் என்று குறிப்பிட்டுள்ளாரா என்றால் முகமது தான் உள்ளது. எனது மகன் முகமது மதம் மாறி எத்தனை வருடங்கள் இருக்கும் என்றால் சுமார் 20 முதல் 25 வருடங்கள் இருக்கும்.

மதம் மாறிய பிறகு எனது மகனின் கையெழுத்து அனைத்தும் முகமது தான் உள்ளது என்றால் சரிதான். நான் ஆதி திராவிட அருந்ததியர் வகுப்பை சார்ந்தவர். மேற்படி ஆதிதிராவிட வகுப்பை குறிப்பிட்டு தான் எனது மகனும், பேரபிள்ளைகளும் பள்ளியில் படித்து வந்தனர் என்றால் இல்லை, முகமதியர் என்று தான் சேர்த்துள்ளோம். எனது மகன் மற்றும் பேரபிள்ளைகளின் பள்ளி சான்றிதழை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இனிமேல் தாக்கல் செய்ய போகிறேனா என்றால் என் மகனை கேட்டால் தான் தெரியும்.

இந்த வழக்கு சொத்து சம்மந்தமாக பணம் கொடுத்தது வாங்கியது என்ற விவரம் எனக்கு தெரியுமா அல்லது என் மகனுக்கு தெரியுமா என்றால் எல்லா விவரமும் எனக்கு தெரியும் ஆனால் எனக்கு எழுதுப்படிக்க தெரியாது. 1வது பிரதிவாதி அசோகன் என்னிடம் எவ்வளவு கடன் வாங்கினார் என்றால் கடன் வாங்கவில்லை ரூ. 2,10,000/- க்கு 1 ஏக்கர் 4 செண்ட்டை கிரையம் கொடுத்தார். 2017 ம் வருடத்தில் ரூ.9,00,00/- ற்கு அடமானம் போடப்பட்டது என்றும், 2018 ம் வருடத்தில் ரூ.5,85,000/- அடமானம் போடப்பட்டது என்றும், 2020 ம் வருடத்தில் எனது மகனிடம் பேசி அவர் நிலத்தை கொடுத்து எங்களிடம் இருந்து பணம் வாங்கிவிட்டார். அந்த கிரைய பத்திரம் சார் பதிவகத்தில் சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டது. வழக்கு சொத்திற்காக மொத்தம் எவ்வளவு ரூபாய் 1வது பிரதிவாதி கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது என் மகனுக்கு தான் தெரியும். பணம் கொடுத்ததை நான் கண்ணால் பார்த்தேன் ஆனால் எவ்வளவு பணம் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது.

அடமான பத்திரங்கள் எனது பெயரில் உள்ளதா என்றால் இல்லை என் மகன் பெயரில் உள்ளது. எனக்கு கொடுக்கப்பட்ட பொது அதிகார பத்திரத்தில் பாஷா என்று உள்ளது அது என் மகன் இல்லை என்றால் சரியல்ல, முகமது பாஷா என் மகனின் பெயர். ஆவணங்கள் முகமது பாஷா தான் உள்ளது.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**Typed to my dictation in the open Court as per the statement of the witness, read over to the witness and admitted by him/her to be correct.**

N SHALINI
Digitally signed by N SHALINI
Date: 2026.06.25 15:13:05 +0530

Additional District Munsif,
Tittagudi.